# பத்திரிக்கை செய்தி

நீலகிரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் காலியாக உள்ள சட்டத்துடன் இணைந்த நன்னடத்தை அலுவலர் (Legal cum Probation Officer) பணியினை ஒப்பந்த அடிப்படையில் நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

சட்டத்துடன் இணைந்த நன்னடத்தை அலுவலர் (Legal cum Probation Officer) பணிக்கு விண்ணப்பிப்போர், சட்டம் சார்ந்த படிப்பில் (பி.எல் அல்லது எல்.எல்.பி - Regular) இளங்கலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் குழந்தைகள் நலன், சமூகநலன் மற்றும் தொழிலாளர் நலன் தொடர்பான சட்டம் சார்ந்த பணிகளில் ஒரு வருட அனுபவமும் பெற்றிருக்க வேண்டும், 40 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் கூடாது. மாத தொகுப்பூதியம் ரூ.21000/- வழங்கப்படும்.

இப்பணிக்கு ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். அவர்கள் கொள்கை உருவாக்கத்திலோ அல்லது திட்ட நடைமுறைப்படுத்தலிலோ பணிபுரிந்து, அரசிதழ் பதிவு பெற்ற அலுவலராக இருந்து ஓய்வு பெற்றவராக இருக்க வேண்டும். வயது 62க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

தகுதியுள்ள நபர்கள் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படத்துடன் வரும் 25.06.2022க்குள் விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பங்களை www.nilgiris.nic.in என்ற இணையதள முகவரியிலோ அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், க.எண்: 19, மாவட்ட ஆட்சியர் கூடுதல் வளாகம், பிங்கர் போஸ்ட், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் என்ற முகவரியிலோ பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இது குறித்த மேலும் விவரங்களுக்கு 0423 - 2445529 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

7/6/22

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.

7/6/2022